

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி 2024

**பிரிவு – 8 வயது (வகுப்பு 3)**

## அறம் வெல்லும்

‘அறம் செய விரும்பு’ என்றார் ஔவை. அறம் என்றால் உண்மை, நேர்மை, தர்மம் …

மனிதன் நல்ல பண்புகளுடன் வாழ அறம் வழிகாட்டுகின்றது. அறத்திலிருந்து விலகுகின்ற மனிதன் அழிவையே சந்திப்பான்.

ஆனால், அதர்மங்கள் ஒருபோதும் வென்றதில்லை. அறமே இறுதியில் வெல்லும்.

அநீதிக்கு எதிராக அகிம்சைப் போர் தொடுத்தவர்கள் எங்கள் திலீபன் மாமாவும் பூபதி அம்மாவும்!

அவர்கள் தங்கள் உயிர்களை தியாகம் செய்தது அறத்திற்காக அல்லவா?

ஆண்டாண்டு காலமாய் அறம் காத்து அரசாண்டது எங்கள் தமிழினம்.

ஆனால் இன்று அழிக்கப்பட்டு, நீதி மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, நாடிழந்து, ஊரிழந்து, வீடிழந்து உலகெங்கும் அகதியாய் அலைகிறது.

எங்கள் சொந்தங்களுக்காகப் போராட வேண்டியவர்கள் நாங்கள் அல்லவா? அறம் வெல்வதற்காய் நாங்கள் போராடுவோம்!

எமக்கான அறம் வெல்லும். இது உறுதி!

நன்றி! வணக்கம்.